டாக்டர் மு. சீனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசித் தொகுதியினுடைய மக்கள் பல வருடங்களாக இந்தக் குற்றவியல் நீதிமன்றம் அவினாசியில் அமைக்கப்படவேண்டும் என்று பலமுறை கோரிக்கை விடுத்தும், அவர்களின் கோரிக்கை இதற்குமுன் நிறைவேற்றப்படவில்லை. இன்றைக்கு தமிழகத்தின் எந்த எதிர்ப்புக்கும் அஞ்சாத சிங்கம், இரும்புத் தலைவி, எங்கள் இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராய் பொறுப்பேற்ற பிறகு இந்தக் குறுகிய காலத்திற்குள், போன பட்ஜெட் கூட்டத் தொடரில் இந்தக் குற்றவியல் நீதிமன்றம் விரைவில் அவினாசியில் அமைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம். புயல் வேகத்தில் அந்த நீதிமன்றம் இந்த பட்ஜெட் கூட்டத் தொடர் வரும் முன்பே அவினாசியில் அமைக்கப்பட்டுவிட்டது. அதற்காக ''மலை போல் வரும் சோதனைகள் யாவும் பனிபோல் நீங்கிவிடும், நம்மை வாழ விடாதவர் வந்து நம் வாசலில் வணங்கிட வைத்து விடும்'' என்பதற்கு இலக்கணமாய் (மேசையைத் தட்டும் ஒலி) நல்லாட்சி புரிந்துகொண்டு இருக்கிற, மாண்புமிகு தமிழகத்தின் தன்னிகரில்லாத முதல்வர், தமிழக மக்களின் தங்கம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் மலர் பாதங்களில், அவினாசி தொகுதி மக்களுடைய நிரந்தர அன்பினையும், நன்றியினையும் காணிக்கையாக்கி, அதை அமுல்படுத்திய அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேட்க வேண்டும்.

வினா எண். 103, திருமதி. கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்.

103—

பத்திரப்பதிவு அலுவலகங்களிலுள்ள நில மதிப்பு பற்றிய புத்தகம்.

*10905 திருமதி. கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

பத்திரப்பதிவு அலுவலகங்களில் விவசாயிகளின் பூமி மதிப்பு பற்றிய புத்தகம் (கைடுலைன் வேல்யூ புக்) விவசாயிகள் கேட்கும் போது காட்ட அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம், வருவாய்த்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

1993 மார்ச் 17]

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் 'ஆம்' என்று சொன்னதற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், இந்த நில மதிப்பு பற்றிய புத்த கத்தில், ரோடு சைடில் உள்ள ஒரு முக்கியமான இடத்திற்கும், அதேபோன்று உட்பகுதியில் உள்ள ஒரு இடத்திற்கும் ஒரே அளவாக மதிப்பீடு கொடுக்கப்பட்டு இருக்கிறது. இதன் காரணமாக பெரும்பாலானோர் கேரளா போன்ற இடங் களுக்குச் சென்று அங்கே பத்திரத்தைப் பதிவு செய்து கொள்கின்ற நிலை வருவதன் காரணமாக, நமது தமிழக அரசுக்கு வருவாய் இழப்பு அதிகமாக இருக்கிறது. இதனைத் தடுக்கும் பொருட்டு, இடத்தின் முக்கியத்துவத்தைக் கருதி, அதற்குத் தகுந்தாற்போல் நில மதிப்பீடு செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா? மேலும், பொது மக்களுடைய வசதிக்காக, இந்த நில மதிப்பீடு பற்றிய புத்தகத்தைக் காண்பிப்பது என்பது எப்போது முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இடத்தினுடைய நில மதிப்பைப் பார்க்கிறபோது, அந்தக் குறிப்பிட்ட கிராமத்தில் 2 ஆண்டுக்குள் பதிவானவைகளை எல்லாம் பார்த்து, அதற்குப் பிறகு அந்தப் பதிவினுடைய விலையை நிர்ணயம் செய்து, அதை அறிவிக் கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது மக்களுடைய நலனுக்காக ஒவ் வொரு கிராம நல அதிகாரிகளிடமும் இந்த நில மதிப்பு பற்றிய புத்தகத்தினுடைய காப்பி கொடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலும் இப்படி புல எண், சர்வே எண் ஒரு கோடியே 80 லட்சம் இருக்கிறது. ஒரு கோடியே 80 லட்சத்திற்கும் தனித் தனியாக விலை மதிப்பு இருக்கிறது. அந்த 1.80 கோடியின் விலை மதிப்பு மொத்தம் 18,416 ஏடுகளில் பதிவு செய்யப் பட்டிருக்கிறது. ஆனால் இவைகள் எல்லாம் வெளியிட படுவதிலோ, வைப்பதிலோ மிகக் கடினமாக இருக்கிறது என்றாலும் இதை 20—9—1991 அன்று இதே சட்டப் பேரவையில் வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள், அது மக்களுடைய பார்வைக்கு வைக்கப்படும் என்று. அந்த அறிவிப்புக்கு ஏற்ப

ஒவ்வொரு நாளும் அலுவலகங்களின் வேலையும் பாதிக்காத வகையிலும், பொது மக்களுடைய நலனைக் கருதியும் எல்லா அலுவலகங்களிலும் காலை 10-00 மணி முதல் 11-00 மணி வரையிலும், மாலை 3-30 மணி முதல் 4-00 மணி வரையிலும் அது பார்வைக்கு வைக்கப்படும். இதை நான் இங்கே தெரிவிக்கின்ற போது, இதை நிலம் வாங்குபவர்கள், விற்பவர்கள் அலுவலகங்களில் கேட்டு, அவர்கள் என்ன சொல்கிறார்களோ, அதை மட்டும் எடுத்துக் கொள்ளாமல், அவர்களே மதிப்பீட்டைப் பார்த்து குறித்துக்கொள்வதற்கு எல்லா விதமான உரிமைகளும் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ‘கைய்டுலைன்ஸ் வேல்யூ’வைப் பற்றிக் கேட்டால், உடனே கொடுக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் நடைமுறையிலே அப்படி சில அலுவலகங்களில் இல்லை. சாதாரண படிக்காத மக்கள் போய்க் கேட்டால், அங்கேயிருக்கின்ற அதிகாரிகள் சிலர் மறுக்கின்ற காரணத்தால் அங்கே சில இடைத் தரகர்களுடைய உதவியை நாட வேண்டிய ஒரு இக்கட்டான சூழ்நிலை இருக்கிறது. ஆகவே பெரிய அலுவலகங்களில் தகவல் சொல்வதற்கென்றே ஒரு எழுத்தரை போட்டிருக்கிறார்கள். அதைப் போன்று இது முக்கியமான துறையாக இருப்பதால், பொதுமக்கள் சம்பந்தப்பட்ட துறையாக இருக்கிற காரணத்தால் தகவலைச் சொல்வதற்கென்றே தனியாக ஒரு எழுத்தரை அங்கே நியமித்தால் இது போன்ற சிக்கல்களுக்கு ஒரு தீர்வு ஏற்படும். அதற்கு ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லியது போன்று பல குற்றச்சாட்டுக்கள் அரசினுடைய கவனத்திற்கு வந்தது. அப்படி கவனத்திற்கு வந்ததைப் பார்த்து, அப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இருக்கவேண்டுமென்பதற்காகவும், வாங்குபவர்களோ, விற்பவர்களோ இந்த புலன் எண்ணை, இந்த சர்வேயினுடைய நில மதிப்பீடு எங்களுக்கு வேண்டுமென்று மனு கொடுக்கவேண்டும். மனு கொடுப்பதற்கு அந்த மனுவில் எந்தவித ஸ்டாம்பும் ஒட்ட வேண்டியதில்லை. அதற்குப் பிறகு அந்த மனுக்களையெல்லாம் அலுவலகங்கள் முறைப்படுத்தி வைத்துக்கொள்ள

வேண்டும். அதற்குப் பிறகு அந்த மேலதிகாரிகள் பார்க்கிற போது, அந்த மனுவின்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பது மட்டுமல்ல, யார் மனு கொடுத்தார்களோ, அவர்கள் நான் அதைப் பார்த்துவிட்டேன். குறிப்பிட்ட பதிவேட்டை நான் பார்த்து தெரிந்து கொண்டேன், என்று அவர்களிடத்திலே கையெழுத்து வாங்கவேண்டுமென்று இன்றைக்கு உத்தரவு போடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருக்கின்ற இடர்பாடுகளைத் தவிர்க்கும் வகையிலும், காலதாமதத்தைத் தவிர்க்கும் வகையிலும், ஒரு கிராம நிர்வாக அலுவலரிடத்திலே அந்தந்த கிராமங்களுக்குரிய புல எண்கள், அதற்குரிய மதிப்பீடு ஆகியவற்றை ஒப்படைத்து அவர்களிடமிருந்தே அதை வேண்டுகின்ற விவசாயிகள் பெற்றுக் கொள்கின்ற முறையை அரசு கொண்டு வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: இப்போது அப்படிப்பட்ட முறை இல்லை. ஆனால் இதுவரைக்கும்—இதற்கு முன்னால் ஆண்டுதோறும் விலை மதிப்பீட்டைச் செய்யவேண்டுமென்று இந்த அரசு செய்தது. ஆனால் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு ஆண்டு தோறும் அப்படிச் செய்வது தேவையில்லை என்றும், கிராமங்களில் எல்லாம் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறையும், மாநகராட்சி, நகராட்சிகளில் மட்டும்தான் விலை ஏறுகிறது, அங்கே மட்டும் ஆண்டுக்கு ஒரு முறை விலை நிர்ணயிக்க வேண்டுமென்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அப்படி உத்தர விட்டிருக்கிறபோது ஆண்டுதோறும், புதிய புதிய வழிகாட்டி ஏடுகள் வருவதால், அவற்றை உடனுக்குடன் அச்சிட்டுக் கொடுப்பதிலே சில சிரமங்கள் இருக்குமென்று இந்த அரசு கருதுகிறது. ஆனால் சிரமங்கள் இருக்கிறது என்று அரசு கருதினாலும், மக்களுடைய தேவைகளைப் பார்க்கின்றபோது அரசுக்கு சிரமமா, மக்களுக்குத் தேவையா என்பதைப் பார்க்கின்றபோது மக்களுடைய தேவைதான் முதன்மை என் பதை எண்ணிப் பார்த்து, அதைப்பற்றி அரசு யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ம. தனபால்.

திரு. ம. தனபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சிலர் சொத்து வாங்குகிறபொழுது, சில காரணங்களுக்காக தன்னுடைய சொத்தின் மதிப்பை அதிகப் படுத்துவதற்காக அதிகமான ஒரு விலையை போட்டு பத்திரப் பதிவு செய்கிறார்கள். அதையே வைத்து அரசு கைய்டு லைன் வேல்யூவாக பிக்சேஷன் செய்கிற நிலைமை ஏற்படு கிறது. எனவே இதுபோன்ற போக்கினை மாற்றி ரீசனபிள் பிக்சேஷனாக செய்யும் வகையில் அரசு ஆவன செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே நான் தெரிவித்தபடி ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் எத்தனை புல எண்கள் இருக் கிறதோ அத்தனை புல எண்களுக்கும் தனித் தனியாக விலை மதிப்பீடு இருக்கிறது. அதற்குப் பிறகு 2 ஆண்டுக் காலத்தில் அந்த குறிப்பிட்ட கிராமத்தில் எத்தனை புல எண்கள் விற்பனை செய்யப்பட்டிருக்கிறது என்று பார்த்து, அதனுடைய சராசரியைப் பார்த்து அதை மதிப்பிடுகிறோம். அப்படி மதிப்பிட்டாலும் சில தவறுகள் வந்து விட்டால் என்ன செய்கிறார்கள் என்றால் அதைக் கொண்டு வந்து பதிவு செய்கிறபோது அதை அரசினுடைய விலை மதிப்பீட்டை அந்தக் குறியீட்டை போட்டார்களா, இல்லையா என்பதைப் பார்க்காமல் பதிவு செய்து விடுகிறார்கள். ஆகவே அரசி னுடைய மதிப்பை, குறியீட்டை அதற்குப் போட்டு பத்திரப் பதிவு செய்தால் உடனேயே பத்திரத்தை மறுநாளே கொடுத்து விடுகிறோம். இல்லாவிட்டால் பதிவு செய்து விட்டு தனித் துணை ஆட்சியாளருக்கு அதை அனுப்பி அது சரிதானா என்று வெரிபிகேஷன் செய்து திருப்பி கொடுத்து விடுகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நில மதிப்பீடு பதிவேட்டில் இருக்கும் விலையை விட அரசுக்கு ஆண்டுக்கு இவ்வளவு விழுக்காடு உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அதையும் குறிப்பிட்டுச் சொல்வது இல்லை. எனவே ஆண் டுக்கு இவ்வளவு விழுக்காடுகள் அதிகரிக்கும் என்று ஒரு சுற்றறிக்கை அனுப்பி பொது மக்களுக்கு அரசு தெரியப் படுத்தினால் நல்லது அல்லவா என அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

1993 மார்ச் 17]

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டுதோறும் இவ்வளவு அதிகமான தொகை பத்திரப் பதிவு மூலமாக அரசுக்கு வரவேண்டும் என்று குறியீடு செய்வது இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 104, திரு. சோ. இராசாராமன், இருக்கையில் இல்லை. அவருக்கு பதிலாக திரு. சத்தியமூர்த்தி கேட்கிறார். மாண்புமிகு கல்வி அமைச்சர்.

104—

தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்புத் துறையில் விற்பனையாகாமலுள்ள நூல்கள்

*9034—திரு. சோ. இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிப்புத் துறையில் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள நூல்கள் விற்பனையாகாமல் தேங்கியுள்ளது அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவற்றை விற்பனை செய்ய அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம், கல்வி அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இது குறித்து அரசு தேவையான நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. வ. சத்தியமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பதிப்புத் துறையில் ஒரு கோடி ரூபாய் மதிப்புள்ள நூல்கள் வினியோகிக்கப்படாமல் தேக்க நிலையில் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். எவ்வளவு காலம் அந்தப் புத்தகங்கள் தேக்க நிலையில் இருக்கின்றன? அதை வினியோகிப்பதற்கு என்ன நடவடிக்கை ஏற்கெனவே எடுக்கப்பட்டது? இனிமேல் எந்த நடவடிக்கையை அரசு எடுக்க இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என அறிய விரும்புகிறேன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS